www.Padasalai.Net www.CBSEtips.in

வகுப்பு : 12

தேர்வு எண் |  |  |  |  |  |  |

# முதல் இடைப்பருவத் தேர்வு - 2023

## தமிழ்

நேரம் : 1.30 மணி | மொத்த மதிப்பெண்கள் : 50

பகுதி – I

அனைத்து வினாக்களுக்கும் விடை தருக. பலவுள் தெரிக 10x1=10

1. இலக்கியத்தையும் மொழியையும் ஒரு சேரப்பேசுகின்ற இலக்கண நூல்

அ) யாப்பருங்கலக்காரிகை ஆ) தண்டியலங்காரம் இ) தொல்காப்பியம் ஈ) நன்னூல்

2. கருத்து 1 : இயல்பு வழக்கில், தொடரமைப்பு என்பது எழுவாய், பயனிலை என்று வருவதே மரபு.

கருத்து 2 : தொடரமைப்பு, சங்கப் பாடல்கள் பலவற்றில் பிறழ்ந்து வருகிறது.

அ) கருத்து 1 சரி ஆ) கருத்து 2 சரி

இ) இரண்டும் கருத்தும் சரி ஈ) கருத்து 1 சரி, 2 தவறு

3. பிழையான தொடரைக் கண்டறிக.

அ) காளைகளைப் பூட்டி வயலை உழுதனர்

ஆ) மலைமீது ஏறிக் கல்வெட்டுகளைக் கண்டறிந்தனர்

இ) காளையில் பூத்த மல்லிகை மணம் வீசியது ஈ) நெற்பயிர்கள் மழைநீரில் மூழ்கின.

4. யார்? எது? ஆகிய வினாச்சொற்கள் பயனிலையாய் அமைந்து உணர்த்தும் திணைகள் முறையே ------

அ) அஃறிணை, உயர்திணை ஆ) உயர்திணை, அஃறிணை

இ) விரவுத்திணை, அஃறிணை ஈ) விரவுத்திணை, உயர்திணை

5. வெள்ளச் சமவெளிகள் அழியக் காரணம்

அ) பருவநிலை மாற்றம் ஆ) மணல் அள்ளுதல்

இ) பாறைகள் இல்லாமை ஈ) நிலத்தடி நீர் உறிஞ்சப்படுதல்

6. பொய்யா வானம் – தடித்த சொல்லின் இலக்கணக் குறிப்பு

அ) வினைத்தொகை ஆ) உரிச்சொல் தொடர்

இ) இடைச்சொல் தொடர் ஈ) ஈறுகெட்ட எதிர்மறைப் பெயரெச்சம்

7. சங்க இலக்கியத்தில் இல்லாத சொற்கள், சங்ககால சமூகத்தில் நடைமுறையில் இருந்துள்ளன.

அ) அறவோர், துறவோர் ஆ) திருமணமும் குடும்பமும்

இ) மன்றங்களும் அவைகளும் ஈ) நிதியமும் சுங்கமும்

8. உலகின் புற இருளை அகற்றுவது --------

அ) தமிழ் ஆ) ஞாயிறு இ) வானம் ஈ) விளக்கு

9. தனிக்குறிலை அடுத்து வாரா ஒற்றுகள்

அ) தகரம், பகரம் ஆ) ரகரம், ழகரம் இ) நகரம், மகரம் ஈ) ணகரம், னகரம்

10. சங்க காலத்தில் ஒவ்வொரு ஆயத்துக்கும் பொறுப்பேற்றிருந்தவர்

அ) தந்தை ஆ) தாய் இ) செவிலித்தாய் ஈ) தோழி



www.Padasalai.Net
Scanned with CamScanner
Kindly send me your study materials to padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.CBSEtips.in

II. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடை தருக. 5x2=10

11. நடை அழகியல் பற்றித் தொல்காப்பியம் கூறும் கருத்தைக் குறிப்பிடுக.

12. ஆளுக்கொரு மரம் வளர்ப்போம் என்னும் வாயிலாக எவற்றை வலியுறுத்துவாய்?

13. 'நகரம் பட்டை தீட்டிய வெள்ளை வைரமாகிறது' – விளக்கம் தருக.

14. நிலையாமை குறித்து சவரி உரைக்கும் கருத்து யாது?

15. தமிழில் பிழையின்றி எழுதுவதற்கு மேற்கொள்ள வேண்டிய முயற்சிகள் யாவை?

16. கால்புள்ளி இடாமல் எழுதுவதனால் ஏற்படும் பொருள் மயக்கத்திற்குச் சான்று தருக.

17. இளநிரை – பிரித்துப் புணர்ச்சி விதி எழுதுக.

III. எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடைதருக. 5x4=20

18. சங்கப் பாடல்களில் ஒலிக்கோலம் குறிப்பிடத்தக்க ஒரு பண்பாகும் விளக்குக.

19. வாடைக் காலத்தில் கோவலர்கள் எவ்வாறு பாதுகாப்பைத் தேடினர்?

20. பேரிடர் மேலாண்மை ஆணையம் – விளக்கம் தருக?

21. பண்டைய விரிந்த குடும்பத்தின் தொடர்ச்சியே இன்றைய கூட்டுக் குடும்பம் – விளக்கம் தருக.

22. 'வருபவர் எவராயினும் நன்றி செலுத்து' – இடஞ்சுட்டிப் பொருள் விளக்குக.

23. பொருள் வேற்றுமை அணியை விளக்குக.

24. பின்வரும் பழமொழியை வாழ்க்கை நிகழ்வுடன் தொடர்புபடுத்தி எழுதுக.

குற்றம் பார்க்கின் சுற்றம் இல்லை

VI. எவையேனும் ஒன்றனுக்கு விடையளிக்க. 1x6=6

25. நெகிழி தவிர்த்து நிலத்தை நிமிர்த்து என்னும் தலைப்பில் சுற்றுச் சூழல் ஆர்வலர் பசுமை தாசனாருடன் நீங்கள் நடத்திய கற்பனைக் கலந்துரையாடலைத் தொகுத்து எழுதுக.

26. பண்பின் படிமமாகப் படைக்கப்பட்ட இராமன் பிற உயிர்களுடன் கொண்டிருந்த உறவு நிலையைப் பாடப்பகுதி வழி நிறுவுக.

27. பாரதியின் கடிதம் வாயிலாக நீங்கள் அறிந்து கொண்ட மொழிப்பற்று, சமூகப்பற்று ஆகியவற்றை விவரிக்க.

V. அடிபிறழாமல் எழுதுக. 1x4=4

28. 'வையகம் பனிப்ப' எனத் தொடங்கும் நெடுநல்வாடை பாடல்.



Scanned with CamScanner
Kindly send me your study materials to padasalai.net@gmail.com